www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# முதல் இடைப்பருவத் தேர்வு – 2024

## ஆறாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி தமிழ் மதிப்பெண்கள்:50

I அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 5x1=5

1. தாய் மொழியில் படித்தால் __________ அடையலாம்.
   அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை ஈ) சிறுமை
2. 'பொய்யகற்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________
   அ) பொய் + அகற்றும் ஆ) பொய் + கற்றும்
   இ) பொய்ய + கற்றும் ஈ) பொய் + யகற்றும்
3. சிலம்பு + அதிகாரம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் __________
   அ) சிலம்பதிகாரம் ஆ) சிலப்பதிகாரம் இ) சிலம்புதிகாரம் ஈ) சிலபதிகாரம்
4. கதிரவனின் மற்றொரு பெயர் __________
   அ) புதன் ஆ) ஞாயிறு இ) சந்திரன் ஈ) செவ்வாய்
5. 'தட்பவெப்பம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________
   அ) தட்பம் + வெப்பம் ஆ) தட்ப + வெப்பம்
   இ) தட் + வெப்பம் ஈ) தட்பு + வெப்பம்

கோடிட்ட இடங்களை நிரப்புக: 4x1=4

6. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது __________
7. தமிழில் நமக்கு கிடைத்துள்ள மிகப்பழமையான இலக்கண நூல் __________
8. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி __________
9. மிக நீண்ட தொலைவு பறக்கும் பறவை __________

பொருத்துக: 3x1=3

10. முத்துச்சுடர் போல – மாடங்கள்
11. தூயநிறத்தில் – தென்றல்
12. சித்தம் மகிழ்த்திட – நிலா ஒளி

II எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளி: 5x2=10

13. பாரதிதாசன் தமிழுக்கு சூட்டியுள்ள பெயர்கள் யாவை?
14. செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவவேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?
15. தமிழ் இலக்கணம் எத்தனை வகைபடும்? அவை யாவை?
16. காணி நிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?
17. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



18. சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம் பெறும்?
19. உயிருள்ள உடல் எது?

**III எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளி:** 2x4=8

20. சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?
21. அஃறிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருள் சிறப்பு யாது?
22. வலசையின் போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?
23. காணிநிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 5x2=10

24. **கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.**
    அ) கவிதை – ____________
    ஆ) பரிபாடல் – ____________
25. **கலைச்சொல் தருக.**
    அ) Face book   ஆ) Whatsapp
26. **பொருள் தருக**
    அ) சித்தம்   ஆ) திங்கள்
27. **சொற்றொடரில் அமைத்து எழுதுக**
    நாள்தோறும்
28. **எதிர்ச்சொல் தருக.**
    அ) இன்பம்   ஆ) உண்மை

**V அடிமாறாமல் எழுதுக** 1x4=4

29. "தமிழுக்கும்" – எனத் தொடங்கும் பாடலை அடிமாறாமல் எழுதுக.

**VI கட்டுரை வடிவில் விடையளி** 1x6=6

30. அ) விடுப்பு விண்ணப்பம்

(அல்லது)

ஆ) அத்தையின் கடிதக் கருத்துக்களைச் சுருக்கி எழுதுக.

.../...

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com